**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 15/2024**

**Prosecution Witness : 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : நல்லுச்சாமி | **Caste** | : |
| **Father's Name** | : சுப்பையா | **Calling** | : தலைமைக் காவலர்-திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 45 |
| | | **Dated** | : 27.06.2025 |

**27.06.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–10 திரு.**நல்லுச்சாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த25.07.2023ம் தேதி நான் நிலைய அலுவலில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் படி அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திண்டுக்கல் சீலப்பாடி, கொத்தம்பட்டியை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரை பார்த்து அவர் மயக்க நிலையில் இருந்ததால் மனைவி மலர்விழி என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று 22.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.414/2023, பிரிவு 279, 337 இதச படி வழக்கு பதிவு செய்தேன். பின் புகாரின் அசல் மற்றும் நகலையும் கனம் JM.NO.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(முதல் தகவல்அறிக்கை அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.06.27 16:26:10 +0530

Judicial Magistrate No.I
Dindigul.